Revised

P.R. 242

# செய்தி வெளியீடு – 18–3–2010

தமிழக அரசின் 2010–2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை 19–3–2010 அன்று காலை 9–30 மணிக்கு தமிழ்நாடு புதிய சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளது.

சட்டப் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு துணை முதல்வர், மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர்கள், பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், அரசு கொறடா மற்றும் பொதுத் துறைச் செயலாளரால் வழங்கப்பட்ட வாகன அனுமதிச் சீட்டுடன் வரும் துணைச் செயலர் மற்றும் அதற்கும் மேல்நிலை அரசு அலுவலர்கள் அண்ணாசாலையில் தந்தை பெரியார் சிலை முன்பு உள்ள வாயில் வழியாக வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் செய்தியாளர்கள் அனைவரும் சுவாமி சிவானந்தா சாலையிலுள்ள வாயில் வழியாகவும், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் வாலாஜா சாலையிலுள்ள வாயில் வழியாகவும் சட்டப் பேரவை வளாகத்தினுள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

எம். செல்வராஜ்
செயலாளர்,
தமிழ்நாடு சட்டப் பேரவை.